பதிவு எண் — ம. 5720 வெள்ளிக் கிழமையில் [illegible] நாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம் ; நந்தன, ஆடி ; 18—7—52. தளிர்-42

## குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## நல்லொழுக்கத் துணை

உண்மையின்பம் எவ்வாறு பெறப்படும்? இதற்குத் தகுந்த விடையினை ஆய்ந்து கண்டவர் சிலரே யாவர். இல்வாழ்க்கையில் உண்மை யின்பம் காண முடியாதென்று மக்களில் பலர், மக்கள் மனைவி சுற்றம் ஆகிய தொடக்குகளை விடுத்துக் கான் புகுந்தும் கடுந்தவம் புரிந்தும் பேரிடர்ப்பட்டும் தாம் கருதிய இன்பம் பெறுமல் கழிந்தொழிந்தமை வரலாறுகள் உணர்த்துகின்றன. நல்லாற்ருற் பொருளீட்டுதலும் அப்பொருளால் செயத்தக்க நற்கடமைகளைக் காதன் மனைவியுந் தானுமாகச் சேர்ந்து வழுவாமற் செய்தலும் அச் செயல்களால் இன்புறுதலும் இல்லறத்தானுக்கே கூடுவதாகும். இல்லற நெறியினின்று விலகிய ஏனையோரும் ஒரோ வொருகால் இல்வாழ்வான் துணையையே நாடி வருவர்.

ஆகவே இல்லற நெறியில் நின்று அறவோர்க்களித்தலாகிய கடமைகளில் கருத்தூன்றி வாழ்பவன் தன் குடும்பத்தவர் சுற்றத்தவர்க்கு மட்டுமேயன்றி, துறந்தார் முதலியவர்க்கும் நல்லொழுக்க நெறியில் துணையாக இருத்தல் பெறப்படும்.

இல்லறக் கடமைகளைச் செவ்விதின் செய்து முடிக்காமல் வேறெந்த நிலையிற் சென்ருலும் உள்ளத்தில் அமைதியோ இன்பமோ பெறுதல் ஒரு சிறிதும் இல்லை. குறையாக விடுத்தொழிந்த இல்லறக் கடமைகளில் உள்ளம் மீண்டும் சுழன்று வருமாதலால் அவர்கள் பின் பற்றும் நிலைகள் எதும் உண்மையில் நிலையா. ஆதலின் மற்றவர்க்கு நல்லொழுக்கத் துணையாகும் இல்வாழ்க்கையை மேற் கொண்டவனே யாவரினும் சிறந்தவனுவான்.

இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

இல்வாழ்வான் என்பான் — இல்லறத்தோடு கூடி வாழ்வான் என்று சொல்லப்படுவான்; இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை — அறவியல்பினை யுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலை பெற்ற துணையாம்.

'இல்' என்பது ஆகுபெயர் 'என்பான்' எனச் செயப்படு பொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார் குருகுல நெறிக்கண் ஆசிரியனிடம் தங்கியுள்ள பிரமசாரி, வனத்தில் மனைவியோடுஞ் சென்று தவம் செய்யும் வானப்பிரத்தன், முற்றத்துறந்த யோகியர் எனனும் இவராவர்.

இவர் எல்லார்க்கும் பசி, நோய், குளிர் இவற்ருல் துன்பம் நேராத வண்ணம் உண்டியும் மருந்தும் உறையுளும் உதவி செய்து அவ்வவர் நெறிக் கண் வழுவாமற், செலுத்தலால், 'நல்லாற்றின் நின்ற துணை' என்ருர்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை 4 | நந்தன, ஆடி. 18-7-52 வெள்ளி | தளிர் 42 |
|---|---|---|


# யாம் பெற்ற - - - - பேறுகள்

(தொண்டைமண்டலத் திருப்பயணக் குறிப்பு.)

"எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே எந்தை நினதருட்புகழை இயம்பியிடல் வேண்டும்" என்று வள்ளலார் வேண்டியது போல எங்கள் ஆசிரியரும் இறைவனை அவ்வப்போது வேண்டுவார். முதலில் தமிழ் மண்டலங்களையும், பிறகு இந்தியப் பெரு நாடு முழுவதையும் பிறநாடுகளையும் சுற்றி ஆங்காங்குள்ள திருக்கோயில்களையும் பெருமக்களையுக் கண்டு வழிபட்டுக்கொண்டு திருவருள் விளக்கும் பணியினையும், அதற்குப் பெருந்துணையாக நிற்கும் தமிழ் மொழி சிறக்கும் பணியினையும் செய்து வர வேண்டும் என்கிற வாழ்க்கைத் திட்டமும் அவர்கள்பால் உண்டு. அதற்கு எத்துணை வசதிகளும் வாய்ப்பும் வேண்டும்! அவை ஏற்பட்டால் அல்லது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் தமிழ் மொழிக்கும் தமிழர் நாகரிகத்துக்கும், ஏன்? தமிழ் இனத்துக்கும் நாட்டுக்குமே எவ்வளவோ சிறப்பும் பயனும் உண்டாகு மல்லவா? ஆகவே அவர்கள் அதற்கான திருவருட் குறிப்புகளை நாளும் எதிர் பார்த்துக் கொண்டே இருப்பது வழக்கம்.

இந் நிலையில், திருக்கழுக்குன்றத்தின்பால் அவர்களுக்குள்ள ஈடுபாடு, அங்கே 5, 6 ஆண்டுகளாக ஆனி மகத்தின் போது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் சார்பில் நடைபெற்றுவரும் திருமுறைப் பெருவிழா பற்றிக் குறைந்த அளவு தொண்டைமண்டல முழுதுமுள்ள அன்பர்களாவது நன்கு தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்தை அவர்களுக்கு உண்டாக்கி விட்டது. விடவே, தமது திட்டப்படி அவர்கள் எத்தகைய வசதிகளையும் செய்து கொள்ளாமலும் எதிர்பாராமலும் திடுமென 2-6-52ல் திருவொற்றியூரில் தொடங்கி 26-6-52ல் திருக்கழுக்குன்றத்தில் மேற்படி விழாவுக்கு முன் முடிக்கிற முறையில் தமது தொண்டை மண்டலத் திருப்பயணத்தை மேற்கொண்டு விட்டார்கள். முன்னேற்பாடு ஒன்று மில்லாத நிலையில் ஏதோ ஓர் ஆவேசத்தினால் உந்தப்பட்டவர்கள் போல, எங்கள் கடமைகள் பலவற்றையும் அப்படி அப்படியே அமைதிப் படுத்தி விட்டும், போகிற போக்கிலேயே செய்து கொள்ளுகிற முறையில் அழைத்துக் கொண்டும் இம் மண்டலத்தினுள்ள பாடல் பெற்ற தலங்கள் 32ஐயும் 25 நாட்களில் வழிபட்டுக் கொண்டு இயன்ற அளவு திருவருள் விளக்கமும், ஷெ விழா விளக்கமும் செய்ய முனைந்து விட்ட எங்கள் செயல் திருவருள் தொடர்புடையது என்பதை நாங்கள் நாளும் உணர்ந்து உருகி மகிழ்ந்தோம்.

இனி, வசதிக் குறைவுகள் பல இருந்தாலும் யாத்திரையின் நோக்கம் அதுவல்ல ஆதலின், அதுபற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் தொடர்ந்து அதில் ஈடுபட்ட அன்பர்கள் சார்பில் உணர்த்தக் கூடிய நிலையில் யாம் பெற்ற சில பேறுகளை மட்டும் கீழே குறிப்பிட விழைகின்றேன். தொடர்ந்து இத்திருப்பயணத்தைப் பற்றிப் பல முகமான கட்டுரைகளை வரைந்து வருவேன். ஆசிரியரும் அன்பர்களும் விரும்பி ஏற்பாடு செய்தால், எல்லாவற்றையும் திரட்டி ஏற்றபடி அமைத்து ஒரு நூலாக்கலாம் என்று எண்ணுகின்றேன். திருவருள் துணை செய்வதாக!

நுட்ப நிலையில் :

(1) திருவருள் நிகழ்ச்சிகளில் நல்ல நம்பிக்கை.

(2) ஆன்றோர்களின் ஆற்றல் மிக்க பணிகளில் மிக்க ஈடுபாடு.

(3) முயற்சி குன்றாமல் வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டால் நன்மைகள் நிறையும் என்னும் தெளிவு.

(4) நல்ல வாய்ப்புகளில் சூழல்களைக் கருதாமல் ஈடுபட்டால் தீமைகள் சேராது என்னும் நுகர்வு.

(5) நிறைவு உள்ளம், அன்புப் பழக்கம், வேற்றுமை கொள்ளாத மனம், தூய நினைவு முதலிய அக நல வளர்ச்சிகள்.

பருமை நிலையில் :

இயற்கைக் காட்சி, இனிய காற்று, நல்ல நீர் இவற்றில் திளைப்பு.

(2) நல்லோர் பலரின் உறவு.

(3) நாட்டு மக்களின் பல்வேறு நிலை பற்றிய நேர் முக அறிவு.

(4) ஆசிரியர் ஆங்காங்குள்ள ஆன்றோர் பாடல்கள் திருப்பதிகளின் நுட்ப ஆற்றல்களை உணர்ந்து கொடுத்த விளக்கங்கள் அறிவு அறவுரைகள்.

(5) வாழ்க்கைப் போக்கில் சில பல திருத்தங்கள், பணிவு நிறைந்த பணி வாழ்க்கையில் வேட்கை முதலின

—ஆடலரசு.

## கச்சியப்பர் கவித்திறன்

(முன் தொடர்ச்சி)

*சி. து. க.*

இலக்கியங்களில், இலக்கண விதிகளையே உவமையாகக் காட்டும் வழக்கம் நூற் புலவர்களிற் சிலரிடந்தான் காணப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் பிரபுலிங்க லீலையில் அத்தகைய எடுத்துக் காட்டுகள் காணப்படுகின்றன. கச்சியப்பரும் தம் இலக்கியங்களில் ஆங்காங்கு இலக்கண விதிகளை உவமையாகக் கொணர்ந்து காட்டுகின்றார்.

வல்லெழுத்துக்கள் இயல்பிலேயே வல்லோசை மிக்குடைய தாய் மார்பினின்று எழுவன. ஆனால் அவ்வெழுத்துக்கள் குற்றியலுகரத்தோடுதொடர்ந்து வரும்போது தம் இயல்பிற் குறைந்து தமக்குரிய ஒரு மாத்திரையிற் குறைந்து அரை மாத்திரையளவில் ஒலிக்கும்.

இந் நிலைமையைத் தலைவியின் நிலைக்கு உவமையாகக் காட்டப்படுகிறது. 'விண்ணவர் போற்றும் நீர்மை யுடையாள் நுங்கள் தலைவி' என்ற தலைவனுக்குத் தோழி மறுமொழி கூறும் பகுதியில் இவ்வுவமை அமைந்துள்ளது. விண்ணவர் தலைவியைச் சிறப்பாகக் கூறினும் அவள் மலை வாழ்நரான குறவர் குடியிற் பிறந்திருத்தலால் குற்றியலுகரத்துள்ள வல்லெழுத்துக்களைப் போன்று தன் தகுதி குறைந்தவளே யாவள் என்று தோழி கூறுகின்றாள்.

இக் கூற்றுக்குத் தலைவன் மறு மொழி கூறுகையில் தமிழ் மொழிக்கண் உள்ள இடை உரிச் சொற்கள் பெயர்ச் சொற்கள் வினைச் சொற்களோடும் சேர்ந்து சிறப்படையும் செயல் போலத் தன் தொடர்பினால் அக்குன்ற வாணர் குலமே சிறப்படையும் என்று பதில் கூறுகின்றான்.

தலைவியின் கூட்டம் தனக்கு இன்றியமையாததாகும் என்றுணர்ந்த தலைவன், அக் கூட்டம், தோழியானன்றி எய்துதற்கியலாதென்றறிந்து, தனக்கு உதவுமாறு பாங்கியை வேண்டுகின்றான்.

உயிரோடு உடல் வந்து ஒன்றுவது இயல்பாகும். இந் நிலைமை இலக்கணத்துள் நன்கு விரிக்கப்படுகின்றது. நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்துக்களே வருமாயின் இரண்டினையும் ஒன்றுபடுத்த இடையில் ஒரு மெய்யெழுத்து வரவேண்டியிருக்கிறது. அவ்வெழுத்துக்கு 'உடம்படுமெய்' என்று பெயர். யகர வகரங்களாகிய இரண்டு மெய்களும் அத்தகைய பணியாற்றுவதாக 'இ ஈ ஐவழியவ்வும்' என்னும் நன்னூற் சூத்திரம் நுவல்கின்றது.

நிலை மொழி ஈற்றில் மெய்யெழுத்து வருமாயின் வருமொழி முதல் உயிரினைத் 'தானாகச் சேர்ந்து இயலுகின்றது. இந் நிலைமையையே தோழி தலைவனுக்கு எடுத்துக் காட்டி உடலும் உயிருமாக இருக்கும் அவர்கட்கிடையில் தான் ஒருத்தி செய்யவேண்டிய செயல் எதுமில்லை என்று கூறுகின்றாள்.

'சடம்படு மாவியும் ஆவியுமாயிற்
சந்திக்க விடை
உடம்படு மெய்யொன் றுறவேண்டுவ
துடலோ டுயிர்வந்து
இடம்படு மாயி னிடையொன்று
வேண்டுவ தெற்றுக் கண்ணால்!
மடம்படு கண்ணிக்கு நீயே மொழிய
வலித்தி யின்றே'

இதனால், அவர்கள் உள்ளக் குறிப்பினைத் தெளிவாகத் தான் உணர்ந்துள்ள நிலைமையைத் தோழி நன்கு விளக்கினள்.

# திருக்கழுக்குன்றச் சொற்பொழிவுகள்

(27-6-52ல் திருமுறை மலைவலத்திற்கு முன் ஆசிரியர் இளவழகனார் அவர்கள் ஆற்றிய தன் சாரம்)

திருமுறைகள் சுத்த தத்துவத்திலிருந்து தோன்றியவை. அதாவது பிரகிருதி தத்துவ வித்தியா தத்துவ நிலைகளைத் தாண்டி ஞான நிலை எய்திச் சுத்த தத்துவ நிலைகளில் வைகிய நம் சமய குரவர்களாகிய நால்வர் பெருமக்களாலும் அவர்கள் வழிப்போந்த அருளாசிரியர்களாலும் வெளிப்பட்டவை. ஆகவே அவைகள் ஆற்றல் மிக்க மெய்யுரைகளாய்த் திகழ்கின்றன. பொல்லாப் பிள்ளையார் அருள, திருநாவலூர் நம்பியாண்டார் நம்பிகள் வாயிலாக அவைகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவைகளைப் போற்றி உயர வேண்டுவது நம் கடன்.

திருமுறைகளுக்கு விழாக்கள் எங்கு எவ்வளவு சிறப்பாக நடைபெற்றாலும், திருக்கழுக் குன்றத்தில் நடக்கும் இத் திருமுறை விழாவுக்கே பெரும் சிறப்பு. திருவண்ணாமலைத் தீப விழாவுக்கு எப்படிச் சிறப்போ அதுபோல. "கடல் ஒலிய தான தமிழ் மறைகள் ஓது கதலி வனம்" என்றும், "தமிழ்வேதவெற்பு" என்றும் அருணகிரியார் குறிப்பிட்டது இதனாற்றான்.

இவ்விழா திருவருளுந்துதலால் நடைபெறுகின்றது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. இந்தக் காலத்தில் நம் நாட்டில் நிலவும் உணர்ச்சி நிலையில் இத்துணை ஆயிரம் அன்பர்கள் கூடி ஈடுபடுகிற முறையில் ஆண்டுக் காண்டு சிறப்பாக விழா நடைபெற்றுவருவதே இதற்குப் பெரும் சான்றாகும். இதனை மேலும் சிறப்பிக்கப் பலரும் முயற்சி எடுக்க வேண்டும்.

திருமுறைகளுக்கும் பிள்ளையாருக்கும் உள்ள இயைபை நோக்கி இவ்விழாவைத் தொடங்குமுன் சிறப்பான முறையில் பிள்ளையார் வழிபாடு நடைபெற வேண்டும் என்று சொல்லி, தானே முன் வந்து அம்மாதிரி நடத்தியும் வைத்திருக்கிறார்கள் சென்னை திரு வேதாசலம் செட்டியார் அவர்கள். அவர்கள் அன்பு பாராட்டத்தக்கதாகும். இவ்விழா இவ்வளவு சிறப்பாகவும் விரிவாகவும் நடைபெறுவதற்குப் பெருந்துணையாக இருப்பவர்கள் வண்ணையம்பதி சிவத்திரு. வள்ளியம்மையார் அவர்களாவார். இவர்களைப் போல் பலரும் முன் வந்து இவ்விழாவை மேலும் மேலும் சிறப்பாக்க வேண்டும். இவ்விழா நடக்கும் போது தமிழ் நாடு முழுவதுமே ஒரு பெருங் கிளர்ச்சி கொள்ளும்படி இருக்க வேண்டும். நாட்டிலுள்ள பல துறைப் பெருமக்களும் திருநாளில் இங்கே வருதல் வேண்டும். அவர்களில் பலருக்கு இவ்விழா நன்கு தெரியாமல் இருப்பது வருந்தத் தக்கது.

இந்த நேரத்தில் இறைவனிடம் நாம் கேட்கக் கூடிய வேண்டுகோள் இவ்விழா சிறக்க வேண்டுமென்பது ஒன்றேயாக இருக்க வேண்டும். விழாவில் கலந்து கொள்ளும் அனைவரும் மிக்க ஒருமித்த அன்புடன் ஒழுங்காய் நடந்து கொண்டு அருளுணர்வைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

—தமிழ்ச்சிறுவன்.

27. 6. 52. அன்று முற்பகலில் திருவடியிடத்தில், "திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம்" என்னும் நூல் வெளியீட்டின் போது திருவள்ளுவரகம் ப. இராமநாத பிள்ளை அவர்கள் ஆற்றியது.

"உருவமும், அன்பர் திரளும் இறைவனைக் குறிக்குமெனினும் நூல் ஒன்றே சிறப்புடையது. இறைவனை நினைப்பூட்டும் இடமும் நூலும் அவனென்றே கருதப் படவேண்டும். கப்பலை நெறியிற் செலுத்துவது சுக்கானாதலால் அது சிறப்புடையது. அதனினும் அதனை இயக்கும் மாலுமி சிறப்புடையவன். அதுபோல உலகுக்கு நூல்களும் அடியார்களும் சிறப்புடையவர். எனவே அவர்களை நாம் போற்றிக் கொள்ளவேண்டும்.

இந்நூல் வெளியீடு பிற பதிகங்களுக்கு உரை எழுதுவதற்கு முன்னறிவிப்பாக உள்ளது. இதற்கு நாம் உதவ வேண்டும் உதவினால் தொண்டுகள் பலவாக வளரும். நூலின் மதிப்பை அறிந்து ஒருவர் பல நூல்களை வாங்கி ஊக்கப்படுத்தலாம். ஆளுக்குப் பத்து நூல்களை வாங்கிப் பதின்மருக்குக் கொடுத்துப் பரவச் செய்தல் நன்று. அதுவே நாம் செய்யக் கூடிய தொண்டு. பன்னிரு திருமுறைகளும் அனைவர் வீடுகளிலும் இருக்கவேண்டும். அடுத்த ஆண்டு இந் நூலுக்குப் பத்தாயிரம் படிகளும் போதா என்னும் நிலை வரவேண்டும்".

திருமுருக கிருபாநந்த வாரியார் உரை:

"சைவ சமயத்தவரின் பரம்பரை மிகப்பெரிது. எனினும் பிற சமயத்தவர் தம் மதத் தலைவர்களின் விழாக்களை நடத்தும்

அளவில், நம் தலைவர்களின் நினைவு நாட்களை நாம் கொண்டாடுவதில்லை. இதற்கு நாம் வெட்கப்பட வேண்டி இருக்கிறது. இனியேனும் தக்க முறையில் கொண்டாட முயலவேண்டும். நம் சமயத் தலைவர்களுள் மிகச் சிறந்தவர் மாணிக்கவாசகர். அவர் நாளைக் கொண்டாடும் இக்கூட்டம் பெருகிப் பலவகைகளிலும் சிறக்கவேண்டும்.

இன்றைய மாணவர்கள் நல்ல முறையில் படிப்பதில்லை. அதாவது பல நூல்களிலிருந்து சிறிது சிறிது கற்றுவிட்டு நன்கு படித்ததாகக் கருதிக் கொள்கின்றனர். இதனால் தவறான முடிவுகளைக் கொள்ள நேருகின்றது. அவை நம் தலைவர்களுக்கு மாறாகி விடுகின்றன. பெரும்பாலான பதிகங்களில் இராவணனைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. நால்வர் பாடியவற்றில் நாம் ஐயப்படக்கூடாது. நம்புதல் வேண்டும். அவர்கள் ஆண்டவனைக் கண்டவர்களன்றோ? நன்கு படிக்கா முன்னமே ஆராய்ச்சி செய்தல் கூடாது. திருக்குறளில் பல அதிகாரங்களை நீக்க வேண்டுமெனபது இவ்வாறு ஆராய்வதன் விளைவாகும். எனவே ஒரு நூலையாவது நன்றாகப் படிக்க வேண்டும். இயலா விட்டால் ஒரு பகுதியையேனும் ஆழ்ந்து படிக்கவேண்டும். திருக்கழுக்குன்றப் பதிகம் இன்று விளக்கங்களுடன் வெளிவருகின்றது. விளக்கம் நமக்கு அன்பை உண்டாக்கும்.

இறைவனே திரு. இளவழகனார் மூலமாக நமக்கு இத் திருப்பதிகத்தை விளக்கி உதவுகின்றார். கடவுள் நல்லவரைக் கொண்டு நன்மையைச் செய்வார். தீயோர் உள்பட அனைவர்க்கும் நன்மையைச் செய்யவே அவர் இருக்கின்றார். தன்னையே இல்லை என்பார்க்கும் உதவுவார். நாம் அவரை வெறுத்தாலும் அவர் அன்பாய் இருப்பார். தாயே இவ்வாறென்றால் அவர் தாயினும் சாலச் சிறந்தவராகையால் மிக்க கருணை உடையவராய் இருப்பார்.


எத்துணையோ வழிகளில் நாம் பணத்தைச் செலவழிக்கின்றோம். ஞான நூல்களை வாங்கிப் பல முறை படித்துச் சிந்தித்து நடைமுறைக்குக் கொண்டுவர முயலவேண்டும். நால்வரே நம் குருமார் என்பதை நாம் உறுதியாகக் கொள்ள வேண்டும். இறைவனே உண்டாக்கிய இச்சமயத்திற்கு நால்வர் வழி காட்டினர். பிறசமயங்கள் குருமார்களால் நிறுவப்பட்டவை.

சைவ மத்திரங்களுக்கேற்பத் திருமுறை அமைந்துள்ளது. திருவாசகம் சிகா மந்திரம் போன்றது. மற்ற நூல்களைப் போல இந் நூலில் பெரும் பகுதி மறையவில்லை. தமிழர் அனைவரும் இந்நூலையும் திருக்குறளையும் பெற்றிருக்க வேண்டும். சமயத்திற்குக் கேடு சூழுமானால் நாம் ஐந்தெழுத் தென்னும் படையைக் கொண்டெழ வேண்டும். இவ்விழாவின் தலைவர் மாணிக்கவாசகரே. அவர் திருவடி தோய்ந்த இவ்விடத்தில் இருப்பதே ஒரு பெருந் தவப்பேறு. இக் கூட்டம் மேலும் பெருக வேண்டும். மலையைச் சுற்றிலும் அடியார் நிறைந்திருக்க வேண்டும். திருவாசகத்தில் நமக்குள்ள அன்பைத் தெரிவிக்கும் செயலாக இத்திருப்பதிக விளக்கத்தைப் போற்றிக் கொள்ள வேண்டும்.

இந்நாட்டுப் பிரதமராய் இருந்தவர் சேக்கிழார். இன்றுள்ள பிரதமரும் இவ்விழாவில் கலந்து கொண்டிருக்க வேண்டும். முதலமைச்சர்கள் சேக்கிழாரும் மாணிக்க வாசகரும் பாடிய நூல்கள் நமக்கு உண்டு. இதைப் போல வேறு எந்த நாட்டிலும் கிடைக்கவில்லை. நம் சிறிய அறிவைக் கொண்டு அப்பெருமக்கள் நூல்களை ஆராய்தல் கூடாது. பெற்றோர் தம் மக்களை இத்துறையில் திருத்த வேண்டும். கிறித்துவர் வீடு தோறும் ஏசுவின் படம் இருப்பது போல நம் வீடு தோறும் நால்வர் படம் இருக்க வேண்டும். இல் வாழ்க்கை நால்வர்க்கு உடன்பாடே.

(வரும்)

—மெய்கண்டான்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

# * நிலவுக்கு - - - - *

[குழப்பம்]

கண்ணின் கருவிழியே!

விண்ணின்றேல் மழையுமில்லை. மண்ணின்றேல் உணவுமில்லை. கண்ணின்றேல் காட்சியுமில்லை. பண்ணின்றேல் பயனுமில்லை. இல்லாளின்றேல் இல்லறமுமில்லை.

உன் கடிதம் எனக்கு ஆர்வமூட்டுகிறது. அறிவைப் புகட்டுகிறது. பண்பைப் பயக்கின்றது. "இனி என் கடிதம் இன்பமூட்டுமா?" என்று கேள்விக் குறியோடு என்னை எளனம் செய்கின்றாய். உன் கடிதம் இன்றேல் என் மனம் மகிழ்ச்சியடையுமா?

அழகுள்ள மலர், மணமுள்ளதாக அமையின் எந்த இளநங்கையும் அதை எடுத்துத் தலையில் சூட விரும்புவாள். உன் ஆர்வமூட்டும் கடிதம், அன்புள்ள கடிதம், அறிவைப் பயக்கும் வகையில் அமைந்திருக்கும்போது — மகிழ்ச்சி கொள்ளாமல் — இன்பமடையாமல் — துன்பத்தின் சாயலையா நான் கொண்டிருக்க வேண்டும்.

ஒரே மரத்தில் தொங்கியிருக்கும் பழமும் காயும் — நீயும் நானும். உலக இன்ப துன்பங்களை என்னைவிட அதிகமாக நுகர்ந்தவன் நீ. உன் அறிவுரை எனக்கு மிகவும் வேண்டற்பாலது.

என் தோழியின் இல்லற வாழ்வு இன்ப வெள்ளத்தில், அன்புக் காற்றால் உந்தப்பட்டு, அசைந்து அசைந்து அழகாக ஆடிச் செல்லும் ஓட மென்று எண்ணியிருந்தேன். அதனால் நிலை கொள்ளா மகிழ்ச்சியும், விம்மிதமும் எய்தினேன். ஆனால் இந்த உன் கடிதம் என் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து "நீ நினைத்தது முழுவதும் கானல் நீர் போன்றதுதான்" என்று காட்டுகின்றதே. காரணம்! அறிய முடியவில்லையடி. நீ அதைச் சரியாக எழுதவில்லையே.

"என் குடும்பத்தைத் துன்ப மேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டிருக்கின்றன. மனைக் கூத்தாடியாகிய நான் மட்டற்ற துன்பம் மனதில் கொண்டிருக்கின்றேன். எந்த வேளையில் என் வீட்டைச் சூழ்ந்த மேகம் மழையாகப் பொழியுமோ என்று எண்ணி, உள்ளம் துடிக்கும் — உன் நிலவு" என்ற உன் வரிகளைக் கண்டதிலிருந்து என் மனம், ஒரு நிலையிலில்லை. ஓடும் வண்டியின் சுழலும் சக்கரம் போல — சிந்தனைச் சுழல்கள் என் மனத்திடத்தே கிளம்பியிருக்கின்றன.

என் உள்ளமென உன்னை எண்ணியிருக்கின்றேன். பின் ஏன் உன் உண்மை நிலையை என்னிடம் கூறாமல் ஒளிக்கின்றாய்? கூறினால் இழுக்கு ஏதாகிலும் நேர்ந்து விடுமோ என்று எண்ணுகின்றாய், வீண் பயம் கொள்கின்றாய்.

தோழீ! நேற்றுத் தேன்மொழி மட்டுமே தனியாக வந்தாள். சிரிப்பு முகத்தோடு வந்தாள்.

இந்தச் சிரிப்பு என் மனத்துக்குப் பிடித்திருந்தது. அவளை நான் "வா தேன்மொழி" என்று வரவேற்றேன். முகத்தானமர்ந்து இனிது நோக்கித்தான் அவளை வா வென்று அழைத்தேன்.

தேன்மொழிக்கு செயலெல்லாம் குறும்பு. பேச்செல்லாம் குறும்பு. "அண்ணா வரவில்லை நான்மட்டுந்தான் வந்திருக்கின்றேன். உனக்குப் பிடிக்குமோ? என்றெல்லாம் சிரித்துக் கொண்டு பேசினாள்.

வரும்போதே என்னை எளனம் செய்வதற்கு ஆரம்பித்துவிட்டாள். எனக்குக் கோபம்

நஞ்சன் கூடுபல்பொடி
பாக்டெரியாரின்
நம்பிக்கை பெற்ற ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ்டானிக்
யூடிநால் கர்பிணிகளுக்கு
டோனடெல் பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெநோ டானிக்
பிரதமென்ஸ் சூதக கோளாருகளுக்கு

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

ஒரு புறம். வெட்கம் ஒருபுறம். தலையைக் குனிந்து கொண்டேன்.

"கண்ணே! கமலமுகமே! கலங்காதே. நானிருக்கப் பயமேன் வேனிலிருக்க வருத்த மெதற்கு.

"வேனிலை நாம் இருவரும் சேர்ந்து தவிக்கவிடலாம் தயங்காதே! தைரியமாயிரு. தலையை நிமிர்ந்து கொள்" என்றெல்லாம் ஆண்பிள்ளை பேசுவது போல் அடித்தொண்டையில் பேசி, என் மோவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்தினள் தேன் மொழி.

எனக்குக் கோபம் அதிகமாக வந்து விட்டது. என்ன சொல்கின்றாள் என்றே எனக்குப் புரியவில்லை. "எழில் இருக்க எண்ண மெதற்கு" என்று ஆத்திரத்தில் மொழிந்தேன்.

பல்லியைக் கண்ட தேள் போல், கீரியைக் கண்ட பாம்பு போல், புலியைக் கண்ட மான் போல்—மகிழ்ச்சியில் மட்டற்றுத் துள்ளி விளையாடிய தேன் மொழியின் முகம் மங்கிய ஒளியைக் காட்டிற்று எழில் என்ற பெயரைக் கேட்டபோது.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

மந்திரத்திலே எனக்கு நம்பிக்கை கிடையாது. ஒருவனுக்கு இன்பமோ அல்லது துன்பமோ பயக்கும் சொற்களைச் சொல்லி அவனுக்கு மன மாற்றத்தை உண்டாக்குவது தான் மந்திரம் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்.

"எழில்" என்ற பதத்திற்கு "அழகு" என்று பொருள். அந்தச் சொல், தேன் மொழியின் முகத்தை அழகற்றதாக அமைக்கின்றதே!

அதற்குக் காரணம்! புரிந்து கொள்ளமுடியவில்லை. தெரிந்து கொள்ள இயலவில்லை.

அவள் கண்ணிலே இருதுளி கண்ணீர் கண்டேன். என் துடுக்குத்தனத்தைத்தான் வெறுத்தேன். அவள் நிலைக்காக மனம் கலங்கினேன.

அவளிடம் மன்னிப்பு வேண்டினேன். எனக்கு எழில் என்றால் என்னவென்றே தெரியாதென்ற உண்மை நிலையை அவள் உணரும்படி செய்தபாடு, ஓயாப் பாடாகி விட்டது. பிறகு அவள் தன் வீட்டிற்குச் சென்றாள்.

நிலவு! உன் குடும்பத்தைச் சூழ்ந்திருக்கும் இன்னல் இன்னதென விளங்கவில்லை. தேன் மொழியின் மன நிலையை மாற்றி யமைக்கும் "எழில்" என்னவென்றே தெரியவில்லை. வெகுவிரைவில் என் மனக் "குழப்பம்" "விடுபட்ட புதிர்" நிலையடையும் என எண்ணும்.

—இளநகை.

குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு

விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்

விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி

விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்

விலை அணா 2.

5. கருக் கலை

விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்

விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வாலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்

விலை அணா 9.

8. முல்லைப்பாட்டு அகராதி

விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்

விலை ரூ. 1.

10. ஆத்திசூடி - கருத்துரை

விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P. O., (S.I.R.)

# * பாரதிகாட்டிய பாதை *

(முன் தொடர்ச்சி) தங்க துரை

கவியுலகில் சிறந்தவன் கம்பன் எனக் கவிதைகள் கூறுவதுண்டு. கம்பன் கவியுலகில் காவலனாகத் தோன்றலாம். ஆனால் வீரத்தை மூட்டி, ஊக்கத்தைக் காட்டி அடிமை விலங்கை அறுத்து சுதந்திரப் பூங்காவை உருவாக்கக் கம்பனிலும் சிறந்த கவிவாணர் பலர் எழுந்தாலும் முடியுமா? முடியாது.

மகிமை பெற்ற பாரதியின் நூல்கள் மதிப்புற்ற மாணிக்கக் களஞ்சியங்கள். தமிழ்த் தென்றலால் மலர்ந்த தேனொழுகும் தமிழ் மொழி மலர்களால் சுதந்திர தாகத்தால் தவித்த தமிழ் மக்களுக்குத் தளையை நொறுக்கித் தாகத்தை தணிக்க வற்றாத ஜீவ நதியை உருவாக்கியதும் இவ்வரகவி நூல்களே. படிக்கும் போதே பாமரர்கள் உள்ளத்திலும் படமாகத் தோன்றித் தேசத்திற்காக உழைக்க வீரக்கனலைத் தூண்டிவிடும் சுடர் விளக்கே பாரதியின் நூல்கள். ஊக்கம், உற்சாகம், உழைப்பு இவற்றால் ஆக்கம்பெறச் செய்யும் அழியாத பெருநிதியே நம் பாரதியின் நூல்கள். ஜாதிபேதக் காரிருளைப் போக்கி ஒற்றுமை ஒளி வீச எட்டயபுரத்தில் தோன்றிய கவிக்கதிரோன் சுடரொளியே பாரதியின் பாக்கள்.

அவரது வீரமொழியால் அச்சப்பேய் ஓடி ஒளிந்தது. அன்புக் கனல் வீசியது. அடிமைச் சங்கிலி நொறுக்குண்டது. சோம்பல் நோய் அகன்றது நாட்டு மக்களின் உள்ளத்தில் அவரது விக்கள் ஈட்டியைப்போல் தாக்கி வீரம் ஊட்டியது என்பதற்குத், "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற அவரது செய்யுள் அடிகளே தக்க சான்றாகும். அடிமைப்பட்ட பெண்களுக்குச் சம உரிமை அளிக்க அரும்பாடு பட்டவர் அமரகவி பாரதியே. தேனினுமினிய தமிழமுதைத் தமிழ் மக்களுக்கு ஊட்டி இன்பம் கண்டவர் கவி பாரதியே. வருங்கால சுதந்திர வீரர்கள் கல்வியிலும், வலிமையிலும், நன்னடக்கையிலும், அன்பிலும், வீரத்திலும், முயற்சியிலும், உழைப்பிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்கு அவர் எழுதியுள்ள 'பாப்பா பாட்டு' சிறந்த எடுத்துக் காட்டாகும்.

வருங்கால சுதந்திரத் தமிழ் மக்கள் வாணிபம், கைத்தொழில், விவசாயம், விமானம், கப்பல், ஆகியவற்றில் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், உழைத்துத், தமிழ் நாடு முன்னேற்றமடைந்து முன்னணியில் நின்று விளங்கவேண்டுமென்பது அவரது பூரணமுடிவாகும். தொழிலாகும் வயலிலே சோம்பலென்னும் களைபிடுங்கி ஊக்கமாகிய எருவிட்டு உழைப்பென்னும் நீர்பாய்ச்சி வந்தால் ஆக்கம் என்னும் தானியக் களஞ்சியங்கள் குவியும் என்பது பாரதியின் நெடுங்கால நம்பிக்கையாகும்.

வலிமை, முயற்சி, ஊக்கம், உழைப்பு, தைரியம், அன்பு, ஆற்றல் ஒற்றுமை, விடுதலை என்னும் நவமணிகளைத் தமிழர்க்கு வழங்கிய கவிமணியை, வீரக்கவி பாடி அச்சத்தை ஒழித்த கவியொளியை இறவா நூல்களை உருவாக்கிய இன்கவியை, தேசத்திடமும், தமிழிடமும், கடவுளிடமும் அன்பு காட்டிய கவியமுதைத் தமிழ்ப் புது நாட்டிளங்கதிரை, சுதந்திர நாட்டின் முன்னேற்றத்தைக் கனவில் வருணித்த அமரகவியை, கவியாறுகள் தோன்றக் காரணமான கவியூற்றைத் தமிழர்களாகிய நாம் உயிருள்ள வரை மறக்க முடியாது.

பலகற்றோரும், சிலகற்றோரும் ஏழைகளும், செல்வந்தரும், விரும்பிக் கற்குமாறு, எளிய நடையில் இயற்றப்பட்டுள்ள அவரது தேன் சொட்டும் தமிழ்க் கவிதைகளான பாப்பாபாட்டு, குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, தேசியப் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய கவி அமுதையும் தேனினுமினிய அவரது கட்டுரைகளையும் தமிழ் மக்களாகிய நாம் உட்கொண்டு அவர் காட்டிய பாதையில் நடந்தால் வீரம், ஊக்கம், உழைப்பு, ஒற்றுமை, அன்பு, ஆக்கம் என்னும் சக்திகள் பெற்று விளங்கித் தமிழ் நாடு முன்னேற்ற மடையும். வீரத்தியாகிகளும், கவிவாணர்களும், நம் நாட்டில் விரும்பிக் கற்று அவரது பாக்கள் காட்டிய பாதையைக் கடைப்பிடிக்க வேண்டியது நமது கடமையாகும் அவர் காட்டிய பாதையில் நடந்தால் தமிழ் நாடு மாநிலத்தின் மணிமகுடமாய் விளங்கும் என்பதற்கு ஐயமுண்டோ?

---

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி.சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)